# பசிபிக் தீவு நாடுகளுக்கு இந்தியா துணை நிற்கும்

## பிரதமர் நரேந்திர மோடி உறுதி

போர்ட் மோர்ஸ்பி, மே 22: பசிபிக் தீவு நாடுகளுக்கு எண்மத் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு, பருவநிலை மாறுபாடு உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் இந்தியா துணை நிற்கும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

பசிபிக் தீவு நாடுகளின் நம்பிக்கைக்குரிய நாடு என்பதில் இந்தியா பெருமை கொள்வதாகவும், அந்த நாடுகளின் தேவைகளுக்கு இந்தியா மதிப்பளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா மற்றும் 14 பசிபிக் தீவு நாடுகள் இடையிலான ஒத்துழைப்பு கூட்டமைப்பின் மூன்றாவது உச்சி மாநாடு, பப்புவா நியூ கினியாவின் போர்ட் மோர்ஸ்பி நகரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பிரதமர் நரேந்திர மோடி - பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராப்பே ஆகியோர் இணைந்து தலைமை வகித்த இந்த மாநாட்டில், குக் தீவுகள், ஃபிஜி, கிரிபட்டி, மார்ஷல் தீவுகள், மைக்ரோனேசியா, நௌரு, சாலமன் தீவுகள், டோங்கா, நியுவே, துவாலு, சமோவா, பலாவ், வனுவாட்டு ஆகிய தீவு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

**சீனா மீது மறைமுக விமர்சனம்:** இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் தனது பலத்தை அதிகரிப்பதுடன், பசிபிக் தீவு நாடுகளில் ஆதிக்கம் செலுத்த சீனா முயற்சித்து வரும் நிலையில், மேற்கண்ட மாநாட்டில் பிரதமர் மோடி பேசியதாவது:

யாரை நம்பத்தகுந்தவர்களாக நாம் நினைத்தோமோ, அவர்கள் நமக்குத் தேவையான நேரங்களில் நம்முடன் நிற்கவில்லை. தற்போதைய சவாலான காலகட்டத்தில், 'நல்ல நண்பனை ஆபத்தில் அறியலாம்' என்ற பழமொழி உண்மையென நிரூபணமாகியுள்ளது.

கரோனா பரவலின் தாக்கங்கள் மற்றும் இதர உலகளாவிய சவால்களுக்கு இடையே பசிபிக் தீவு 'நண்பர்களுக்கு' உறுதுணையாக இந்தியா நிற்பது மகிழ்ச்சிக்குரியது. தடுப்பூசிகளோ, அத்தியாவசிய மருந்துகளோ, கோதுமையோ அல்லது சர்க்கரையோ, தனது திறன்களுக்கு ஏற்ப நட்பு நாடுகளுக்கு இந்தியா உதவி வருகிறது.

**சுதந்திரமான இந்திய-பசிபிக் பிராந்தியம்:** சுதந்திரமான, வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய இந்திய-பசிபிக் பிராந்தியம், பசிபிக் நாடுகளுக்கு மிக முக்கியம். அந்த வகையில், இந்தியா உறுதியான ஆதரவை நல்கும். அனைத்து நாடுகளின் இறையாண்மை, ஒருமைப்பாட்டை நாங்கள் மதிக்கிறோம்.

ஒத்துழைப்புக்கான இந்தியாவின் அணுகுமுறை மனித மாண்புகள் அடிப்படையிலானது. பன்முகத்தன்மையில்தான் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

வளர்ச்சிப் பணியாக இருந்தாலும், மனிதாபிமான உதவிகளாக இருந்தாலும், இந்தியாவை நம்பகமான நாடாக பசிபிக் தீவுகள் கருதலாம்.

தனது திறன்கள் மற்றும் அனுபவங்களை எவ்வித தயக்கமுமின்றி பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது. எண்மத் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பம், சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, பருவநிலை மாறுபாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு என அனைத்து அம்சங்களிலும் பசிபிக் தீவு நாடுகளுக்கு இந்தியா துணைநிற்கும்.

என்னைப் பொருத்தவரை, நீங்கள் சிறிய தீவு நாடுகளல்ல; அகண்ட பெருங்கடல் நாடுகள். அந்த அகண்ட பெருங்கடல்தான், இந்தியாவை உங்கள் அனைவருடனும் இணைக்கிறது என்றார் பிரதமர் மோடி.

முன்னதாக, ஜப்பான் பயணத்தைத் தொடர்ந்து, பப்புவா நியூ கினியாவுக்கு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தார். அந்நாட்டுக்கு வருகை தந்த முதல் இந்திய பிரதமர் என்ற பெருமை பிரதமர் மோடிக்கு சொந்தமாகியுள்ளது. பப்புவா நியூ கினியாவில் திங்கள்கிழமை பயணத்தை நிறைவு செய்த பிரதமர், அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்டார்.



பப்புவா நியூ கினியாவின் போர்ட் மோர்ஸ்பி நகரில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், டோக் பிசின் மொழியில் திருக்குறள் நூலை வெளியிட்ட பிரதமர் மோடி, பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராப்பே. உடன், மொழிபெயர்ப்பு செய்த சுபா சசீந்திரன், மேற்கு நியூ பிரிட்டன் மாகாண ஆளுநர் சசீந்திரன் முத்துவேல் (வலது ஓரம்).

## டோக் பிசின் மொழியில் திருக்குறள் வெளியீடு

தமிழின் தொன்மையான நூலான திருக்குறளின் டோக் பிசின் மொழிபெயர்ப்பு நூலை பிரதமர் மோடியும், பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராப்பேயும் வெளியிட்டனர். பப்புவா நியூ கினியாவின் அதிகாரபூர்வ மொழி டோக் பிசின் ஆகும்.

இந்த மொழியில் திருக்குறளை மேற்கு நியூ பிரிட்டன் மாகாண ஆளுநர் சசீந்திரன் முத்துவேலும் அவரது மனைவி சுபா சசீந்திரனும் மொழிபெயர்த்துள்ளனர்.

'பப்புவா நியூ கினியாவில் டோக் பிசின் மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிடும் கௌரவம் பிரதமர் ஜேம்ஸ் மராப்பேவுக்கும் எனக்கும் கிடைத்தது. பல்வேறு துறைகள் குறித்து மதிப்புமிக்க கருத்துகளைக் கொண்டுள்ள தலைசிறந்த படைப்பு திருக்குறளாகும்.

திருக்குறளை டோக் பிசின் மொழியில் மொழிபெயர்த்த ஆளுநர் சசீந்திரனும் அவரது மனைவி சுபா சசீந்திரனும் பாராட்டுக்குரியவர்கள். ஆளுநர் சசீந்திரன் தனது பள்ளிப் படிப்பை தமிழில் முடித்துள்ளார். சுபா சசீந்திரன் ஒரு மரியாதைக்குரிய மொழியியலாளர் ஆவார்' என்று பிரதமர் மோடி ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## பசிபிக் தீவு நாடுகளில் 'மக்கள் மருந்தகங்கள்'

பசிபிக் தீவு நாடுகளுக்கான இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிவிப்பு வருமாறு: ஃபிஜி தீவில் இந்தியாவின் செலவில் உயர் சிறப்பு இருதயவியல் மருத்துவமனை; 14 தீவுகளிலும் டயாலிசிஸ் மையங்கள் அமைக்க தேவையான உதவி; படகு ஆம்புலன்ஸ்கள் விநியோகம்; மலிவு விலையில் மருந்துகளை விற்பனை செய்யும் 'மக்கள் மருந்தகங்கள்' (ஜன் ஔஷதி), யோகா மையங்கள்; சிறு, நடுத்தர தொழிலகங்களின் மேம்பாட்டுத் திட்டம், கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகள்.

## மதிய விருந்தில் சிறுதானிய உணவுகள்

இந்திய-பசிபிக் தீவுகள் உச்சிமாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்கு பிரதமர் மோடி சார்பில் மதிய விருந்து அளிக்கப்பட்டது. அதில், காண்ட்வி எனப்படும் குஜராத் மாநில சிற்றுண்டி, சிறுதானிய பிரியாணி, ராஜஸ்தானின் கேழ்வரகு, பருப்பு உணவு வகைகள், மசாலா மோர், பான் குல்ஃபி, மசாலா தேநீர், மூலிகை தேநீர் உள்ளிட்ட இந்திய உணவு வகைகள் பரிமாறப்பட்டன.

## பிரதம மந்திரி மலிவு விலை மருந்து திட்டம்

- பிரதம மந்திரி மலிவு விலை மருந்து திட்டம் என்பது மருந்துகளுக்கு மலிவான விலையில் தரமான மருந்துகளை வழங்குவதற்காக இந்திய அரசின் மருந்துகள் அமைப்பால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். பிரதம மந்திரியின் மலிவு விலை மருந்து திட்டம் கடைகளில் பொதுவான மருந்துகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

## Pradhan Mantri Bharatiya Janaushadhi Pariyojana

- Pradhan Mantri Bharatiya Janaushadhi Pariyojana campaign–public welfare scheme of Government of India. It was launched by the Department of Pharmaceuticals to provide quality medicines at affordable prices to the masses through special kendras known as Pradhan Mantri Bharatiya Janaushadhi Pariyojana Kendra.

EVA STALIN IAS ACADEMY

# நத்தம் நில வகைகள் இனி 'ரயத்துவாரி மனை' என அழைக்கப்படும்

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, மே 22:** நத்தம் நில வகைகளை கணினிமயமாக்கும் பணிகளை எளிதாக்க, அந்த வகை நிலங்கள் இனி 'ரயத்துவாரி மனை' என ஒரே வகை பெயரிட்டு அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை வெளியிட்டது. உத்தரவு விவரம்:

நிலப் பதிவேடுகளைக் கணினிமயமாக்கும் பணி கடந்த 2003–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 'அ பதிவேடு' மற்றும் நகர நிலங்களுக்கான பதிவேடுகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. கிராம நத்தம் வகை நிலங்களைக் கணினிமயமாக்குவதற்கான மென்பொருள் விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளன. இவ்வாறு கணினிமயமாக்கும் போது, நிலங்களுக்கான வகைப் பெயர்கள் வெவ்வேறாக இருந்தால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும். உதாரணத்துக்கு, அரசு மனை எனும் பெயர், கணினி மென்பொருளில் அரசு நிலமாகக் கருதப்படும். இதனால், நிலங்களை தனிநபர்கள் பெயர் மாற்றம் செய்யத் தடை ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டு, நத்தம் நிலங்களுக்கான பெயர்களை ஒரே மாதிரியாகக் கொண்டு வர வேண்டுமென தமிழக அரசிடம், நில நிர்வாக ஆணையரகம் கேட்டுக் கொண்டது.

இதையடுத்து, நிலங்களின் வெவ்வேறு பெயர்கள் மாற்றப்பட்டு, ஒரே மாதிரியான பெயர் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நத்தம் நன்செய், நத்தம் புன்செய், நத்தம் மனை, நத்தம் புறம்போக்கு, பட்டாதாரரின் பெயருடன் கூடிய நத்தம் , பட்டாதாரர் பெயருடன் கூடிய தனிநபர் நிலம், அரசு மனை, சர்கார் மனை ஆகியன இனி ரயத்துவாரி மனை என அழைக்கப்படும்.

நத்தம் அடங்கலில் சர்கார் புறம்போக்கு மற்றும் காலி நத்தம், காலி மனை ஆகியன யாராலும் பயன்படுத்தப்படாமல் பொதுவாக இருந்தால், அது சர்கார் புறம்போக்காக வகைப்பாடு செய்யப்படும்.

நத்தம் சர்வேயில் கோயில்கள், இடுகாடுகள், சாலைகள், மாநில, தேசிய நெடுஞ்சாலைகள், பூங்காக்கள், பள்ளிகள் மற்றும் இதர பொது மக்களுக்கான பயன்பாட்டு இடங்கள் சர்கார் புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டிருக்கும் என்று வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறையின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நத்தம் நில உரிமையாளர்களின் நீண்டகால பிரச்னைக்குத் தீர்வு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. நில உரிமையாளர்களுக்கு கணினிமயமான பட்டா கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

Activate Windows
Go to Settings to activate Windows.

# பிரதமர் மோடிக்கு பப்புவா நியூ கினியா, ஃபிஜியின் உயரிய விருதுகள்

**போர்ட் மோர்ஸ்பி, மே 22:** பிரதமர் நரேந்திர மோடிக்கு பப்புவா நியூ கினியா, ஃபிஜி ஆகிய நாடுகளின் உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

பப்புவா நியூ கினியாவில் பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை தனது முதல் பயணத்தை மேற்கொண்டார். அங்கு நடைபெற்ற இந்தியாவுக்கும் 14 பசிபிக் தீவு நாடுகளுக்கும் இடையிலான உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்றார். இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்த உச்சி மாநாடு நடைபெற்றது.

இந்தப் பயணத்தின்போது, பப்புவா நியூ கினியாவின் உயரிய விருதான 'கிராண்ட் கம்பானியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் லோகோஹு" விருதை பிரதமர் மோடிக்கு அந்நாட்டின் கவர்னர் ஜெனரல் பாப் டாடே வழங்கினார். இது அந்நாட்டுக் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதாகும். இந்த விருதைப் பெறுபவர்கள் 'சீஃப்' என்று அழைக்கப்படுவார்கள்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் 'பப்புவா நியூ கினியா தமது உயரிய விருதை பிரதமர் மோடிக்கு அளித்துள்ளது. இது இந்தியாவுக்கு கிடைத்துள்ள முன்னெப்போதும் இல்லாத கௌரவமாகும்' என்று தெரிவித்துள்ளது.



பிரதமர் நரேந்திர மோடிக்கு பப்புவா நியூ கினியாவின் உயரிய விருதை வழங்கிய அந்நாட்டின் கவர்னர் ஜெனரல் பாப் டாடே

பசிபிக் தீவு நாடுகளின் ஒற்றுமைக்குப் பாடுபட்டதற்காக பிரதமருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பப்புவா நியூ கினியாவில் வசிக்காத, அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் உள்ளிட்ட வெகு சிலருக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஃபிஜி நாடும் தனது உயரிய விருதை பிரதமர் மோடிக்கு வழங்கியது. இதுகுறித்து பிரதமர் அலுவலகம் தெரிவிக்கையில், 'ஃபிஜியின் உயரிய விருதை பிரதமர் மோடிக்கு அந்நாட்டுப் பிரதமர் சிடிவேனி ரபுகா வழங்கியுள்ளார்.

'கம்பானியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் ஃபிஜி' என்ற அந்த விருது வழங்கப்பட்டுள்ளது இந்தியாவுக்கு பெரிய கௌரவமாகும். ஃபிஜியில் வசிக்காத ஒரு சிலருக்கே இந்த விருது இதற்கு முன்பு வழங்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளது.

## நியூஸிலாந்து பிரதமருடன் சந்திப்பு

போர்ட் மோர்ஸ்பி நகரில் நடைபெற்ற இந்திய-பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டையொட்டி, நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸுடன் பிரதமர் மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

வர்த்தகம், கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

புப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ் மராப்பே, கவர்னர்-ஜெனரல் பாப் டாடே ஆகியோருடனும் ஆலோசனை மேற்கொண்ட பிரதமர் மோடி, வர்த்தகம், தொழில்நுட்பம், சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து விவாதித்தார்.

ஃபிஜி, டோங்கா உள்ளிட்ட பல்வேறு தீவு நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் இருதரப்பு ஆலோசனை மேற்கொண்டார்.

Activate Windows
Go to Settings to activate Windows.

# ரூ.2,000 நோட்டு வாபஸ்: கரன்சி நிர்வாக நடவடிக்கையின் ஒரு பகுதி


**புது தில்லி, மே 22:** ரூ.2,000 நோட்டு வாபஸ் நடவடிக்கை என்பது கரன்சி நிர்வாக நடவடிக்கையின் ஒரு பகுதிதான் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்தார்.

இது குறித்து புது தில்லியில் செய்தியாளர் சந்திப்பில் ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியதாவது;

நாட்டின் ரூபாய் நோட்டுகள் நிர்வகிப்பின் ஒரு பகுதியாக ரூ.2,000 நோட்டுகளைத் திரும்பப் பெறும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் ரூபாய் நோட்டு நிர்வாகம் அமைப்பு வலுவாக உள்ளது. நாட்டின் மொத்த ரூபாய் நோட்டு பயன்பாட்டில் ரூ.2,000 நோட்டுகள் வெறும் 10.8 சதவீதம் மட்டுமே பங்காற்றுகிறது. எனவே, ரூ.2,000 நோட்டுகளைத் திரும்ப பெறும் நடவடிக்கையின் பொருளாதாரத் தாக்கம் மிக மிக குறைவாகவே இருக்கும்.

ரூ.500,ரூ.1,000 நோட்டு பண மதிப்பிழப்பு நடவடிக்கையின்போது மக்களின் ரூபாய் நோட்டுகள் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்ய ரூ.2,000 நோட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் பெரும்பாலான ரூ.2,000 நோட்டுகள் திரும்ப பெறப்படும் என எதிர்பார்க்கிறோம். ரிசர்வ் வங்கியிடம் மட்டுமின்றி வங்கிகளிடமும் மற்ற ரூபாய் நோட்டுகளின் போதிய கையிருப்பு இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறையில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கருத்தில்கொண்டு விதிமுறைகளை மாற்றவும் ஆர்பிஐ தயாராக உள்ளது.

வங்கி கணக்குகளில் ரூ.50,000க்கும் அதிகமாக பணம் செலுத்தும்பொழுது பான் கார்டு எண் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்படும் நடைமுறை தொடரும். நாட்டின் பணப்புழக்கம் நாள்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

உக்ரைன்-ரஷிய போர், மேற்கு நாடுகளின் வங்கிகளில் நிதி நெருக்கடி உள்பட உலகில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்தாலும் இந்தியாவின் பணப் பரிமாற்ற விகிதம் நிலையாகவே இருக்கிறது' என்றார்.

**'வாடிக்கையாளர்களுக்கு நீரும் நிழலும் அவசியம்':** கடந்த 2016-ஆம் ஆண்டு, பழைய ரூ.500, ரூ.1,000 நோட்டுகள் மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தபோது அந்த ரூபாய் நோட்டுகளை மாற்றுவதற்கு வங்கிகள் முன் நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் சிலர் உயிரிழந்தது பெரும் விமர்சனத்துக்கு உள்ளானது.

தற்போது திரும்ப பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள ரூ.2,000 நோட்டுகளை மாற்றும் சேவை செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கப்படும் நிலையில், முந்தைய சூழல்களைக் கருத்தில் கொண்டு வங்கிகளுக்கு ஆர்பிஐ திங்கள்கிழமை வெளியிட்ட சுற்றறிக்கையில், 'கோடை காலத்தையொட்டி ரூ.2000 நோட்டுகளை மாற்ற வரும் வாடிக்கையாளர்கள், மக்களின் பாதுகாப்புக்காக நிழல் உள்ள காத்திருப்பு இடங்களைத் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

குடிநீர் வசதியும் செய்து தரப்பட வேண்டும். நோட்டுகளை மாற்றும் சேவையைப் பல்வேறு கவுன்ட்டர்களில் வழங்கி மக்களின் பணியை எளிதாக்க வேண்டும். வங்கிகளில் கொடுத்து மாற்றப்படும், கணக்குகளில் செலுத்தப்படும் ரூ.2,000 நோட்டுகள் குறித்து வங்கிகள் உரிய தினசரி கணக்கை பராமரிக்க வேண்டும்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பெட்ரோல் நிலையங்களில் அதிகரிப்பு:** நாடு முழுவதும் பெட்ரோல் பங்குகளில் ரூ.2,000 நோட்டுகளின் புழக்கம் 90 சதவீதம் அதிகரித்துள்ளதாக அகில இந்திய பெட்ரோல் விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜய் பன்சல் தெரிவித்தார்.

ரூ.100 -ரூ.200க்கும் பெட்ரோலை நிரப்பிவிட்டு வாடிக்கையாளர்கள் ரூ.2,000 நோட்டுகளைத் தருவதாகவும், இதனால் சில்லறை நோட்டுகளுக்கு தட்டுப்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# போக்ஸோ வழக்குகளில் தாமதமின்றி நீதி

## தலைமை நீதிபதி வலியுறுத்தல்

புதுச்சேரி, மே 22: போக்ஸோ வழக்குகளில் தாமதமின்றி நீதி வழங்கப்பட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) டி. ராஜா தெரிவித்தார்.

புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் போக்ஸோ வழக்குகளை விசாரிக்க விரைவு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென தனி நீதிபதியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறப்பு நீதிமன்றத்தை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) டி.ராஜா திங்கள்கிழமை திறந்து வைத்துப் பேசியதாவது:

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை குற்றங்களை விசாரிக்க இந்த நீதிமன்றம் திறக்கப்பட்டுள்ளது. இத்துடன் சேர்த்து புதுவையில் 18 நீதிமன்றங்கள் செயல்பட உள்ளன.

போக்ஸோவில் மிகக் கடுமையான சட்டப் பிரிவுகள் உள்ளன.




புதுச்சேரியில் போக்ஸோ விரைவு நீதிமன்றத்தை திங்கள்கிழமை திறந்துவைத்த உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொ) டி.ராஜா. உடன், முதல்வர் என்.ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், சட்டத் துறை அமைச்சர் க.லட்சுமி நாராயணன், உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், ஜி.கே.இளந்திரையன், புதுவை தலைமை நீதிபதி செல்வநாதன், தலைமைச் செயலர் ராஜீவ் வர்மா, துறைச் செயலர் ஜி.செந்தில்குமார், ஜி.நேரு எம்எல்ஏ உள்ளிட்டோர்.

கொலை, கொள்ளை வழக்குகளில் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. இதேபோல, போக்ஸோ வழக்கில் கைது செய்யப்பட்டால் கடுமையான விளைவைச் சந்திக்க நேரிடும். வழக்குரைஞர்கள் போக்ஸோ வழக்கை சாதாரணமாக நடத்திவிட முடியாது. இந்த வழக்கை கையாள வழக்குரைஞர்கள் கூடுதல் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

காலதாமதமின்றி நீதி வழங்கப்பட வேண்டும். சட்டங்களை அறிந்து கொள்ளாமல் வழக்குரைஞர்கள் நீதிமன்றத்துக்கு வர முடியாது. அவர்கள் வெற்றியாளராக மாற கடின உழைப்பை வெளிப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

விழாவில் புதுவை முதல்வர் என்.ரங்கசாமி பேசியதாவது: புதுவையில் போக்ஸோ விரைவு நீதிமன்றம் அமைத்து, வழக்குகளை விரைவாக தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிபதிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் இந்த விரைவு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

வழக்குரைஞர்கள், நீதிபதிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசு ஏற்படுத்தித் தரும்.

பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு விரைவாக நீதி கிடைக்கும் வகையில் நீதிமன்றம் திறக்கப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்படும் தீர்ப்புகள் மூலம் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும். புதுவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கருத்தரங்குக் கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

விழாவில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், ஜி.கே.இளந்திரையன் ஆகியோர் பேசினர்.

புதுவை சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், மாநில சட்டத் துறை அமைச்சர் க. லட்சுமி நாராயணன், ஜி.நேரு (எ) குப்புசாமி எம்எல்ஏ, தலைமைச் செயலர் ராஜீவ் வர்மா, புதுவை தலைமை நீதிபதி ஜெ.செல்வநாதன், சட்டச் செயலர் சி.செந்தில்குமார், புதுச்சேரி வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் எம். குமரன், செயலர் எஸ்.கதிர்வேல் மற்றும் வழக்குரைஞர்கள் கலந்து கொண்டனர்.

Activate Windows
Go to Settings to activate Wir

# தேசிய சுற்றுலா கொள்கை விரைவில் வெளியீடு

## மத்திய அமைச்சர் தகவல்

ஸ்ரீநகர், மே 22: தேசிய சுற்றுலா கொள்கையை மத்திய அரசு விரைவில் வெளியிடும் என்று மத்திய சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி தெரிவித்தார்.

சுற்றுலா தொடர்பான ஜி20 பணிக்குழுவின் மூன்றாவது கூட்டம், ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகரில் திங்கள்கிழமை தொடங்கியது.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து 60-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றுள்ள இக்கூட்டம், பலத்த பாதுகாப்புடன் 3 நாள்கள் நடைபெறுகிறது.

கூட்ட தொடக்க நிகழ்வில், மத்திய அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி பேசியதாவது:

இந்தியாவுக்கான தேசிய சுற்றுலாக் கொள்கையை விரைவில் வெளியிடவிருக்கிறோம். சர்வதேச சுற்றுலா முதலீட்டு மாநாட்டையும் நடத்தவுள்ளோம். சுற்றுலாத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை மத்திய அரசு அனுமதித்து வருகிறது. தனியார் முதலீடு இல்லாமல், உலகளாவிய சுற்றுலா மையமாக இந்தியா உருவெடுக்க முடியாது என்பதே அரசின் சிந்தனை என்றார்.

ஜி20 தலைமைக்கான இந்தியாவின் பிரதிநிதி அமிதாப் காந்த் பேசுகையில், 'உலகில் 70 சதவீத நாடுகள் கடன் பிரச்னை, வேலையிழப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்தியா சுமார் 7 சதவீத அளவுக்கு வளர்ச்சியை கண்டு வருகிறது. இங்கு வீட்டு வசதி திட்டத்தின்கீழ் 4 கோடி வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

11 கோடி வீடுகளுக்கு கழிப்பறை வசதி, 24 கோடி வீடுகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 55 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான, மீண்டெழும் வளர்ச்சிக்கே முன்னுரிமை அளிக்கிறோம்' என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங், 'ஜி20 சர்வதேச கூட்டம், ஸ்ரீநகரில் நடத்தப்படுவதே பெரிய சாதனை' என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நீரஜ் சோப்ரா சாதனை



**புது தில்லி, மே 22:** இந்திய ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா, ஆடவருக்கான உலகத் தரவரிசையில் முதலிடம் பிடித்து அசத்தியிருக்கிறார். இவ்வாறு முதலிடம் பிடித்த முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

உலகதடகள அமைப்புசமீபத்தில் வெளியிட்ட தரவரிசையின் படி, நீரஜ் சோப்ரா 1,455 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். கிரனாடா வீரர் ஆண்டர்சன் பீட்டர் 2-ஆவது இடத்திலும் (1,433), செக் குடியரசின் ஜேக்கப் வட்லெஜ் 3-ஆவது இடத்திலும் (1,416) உள்ளனர். ஜெர்மனியின் ஜூலியன் வெபர் (1,385), பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் (1,306) ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களில் உள்ளனர்.

ஏற்கெனவே, ஒலிம்பிக் தடகளத்தில் தங்கம் வென்ற முதல் இந்தியர், டைமண்ட் லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனைகளை படைத்த நீரஜ் சோப்ரா, தற்போது தரவரிசையின் சாதனைக்கும் சொந்தக்காரர் ஆகியிருக்கிறார்.



# சவூதி அரேபியர்களுடன் விண்ணில் பாய்ந்தது ஸ்பேஸ்–எக்ஸ் விண்கலம்

கேப் கனாவெரல், மே 22: இரு சவூதி அரேபியர்கள், இரு அமெரிக்கர்களுடன் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஃப்ளோரிடா மாகாணம், மெரிட் தீவிலுள்ள கென்னடி ஏவுதளத்திலிருந்து ஸ்பேஸ்-எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட அந்த விண்கலத்தில், நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் பெக்கி விட்ஸனுடன் வர்த்தக ரீதியிலான ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க தொழிலதிபர் ஜான் ஷாஃப்னர், சவூதி அரேபிய விண்வெளி வீரர் அலி அல்-கார்னி, வீராங்கனை ரயானா பர்னாவி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் செல்கின்றனர்.

இவர்களில் ரயானா பர்வானிதான் விண்வெளிக்குச் செல்லும் சவூதி அரேபியாவின் முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் 10 நாள்கள் இருந்துவிட்டு அவர்கள் பூமி திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

EVA STALIN IAS ACADEMY